LIBRA
04 DEC 2009
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2007/2008 (செப்ரம்பர்/ஒக்டோபர் 2009)

## EDU 1201 Education and Human Resource Development

நேரம் : 02 மணித்தியாலங்கள்

ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) மனிதவள அபிவிருத்தியில் கல்வியின் முக்கியத்துவம் பற்றி விளக்குக?

(07 புள்ளிகள்)

(ஆ) மனிதவள அபிவிருத்திக்கான உத்திகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

(09 புள்ளிகள்)

(இ) தனிமனித அபிவிருத்தி எவ்வாறு ஒரு நாட்டின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் என்பதனைச் சுருக்கமாக ஆராய்க?

(09 புள்ளிகள்)

02.(அ) புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தும்போது மனிதர்கள் தங்களைத் தயார் செய்வதற்குக் கையாளக் கூடிய உத்திகளை உதாரணம் தந்து விளக்குக?

(09 புள்ளிகள்)

(ஆ) நேரவளத்தைப் பயன்படுத்துவதில் **"காலத்தை வெல்லுதல்"** என்பதால் நீர் விளங்குவது யாது என்பதைச் சுருக்கமாக விளக்குக?

(09 புள்ளிகள்)

(இ) பாடசாலை ஒன்றில் முரண்பாடுகளை முகாமை செய்யும்போது அதிபர் கையாளக்கூடிய உத்திகள் யாவை?

(07 புள்ளிகள்)

03.(அ) "பொருத்தமற்ற கலைத்திட்டத்தாலும், கற்பித்தல் முறைகளாலும் கல்வியில் விரயம் ஏற்படுகின்றது". இக்கூற்றை நுணுகி ஆராய்க?

(09 புள்ளிகள்)

(ஆ) ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன என்பதை விளக்குக?

(07 புள்ளிகள்)

(இ) ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக இலங்கையில் உள்ள சந்தர்ப்பங்கள் யாவை?

(07 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றில் மூன்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) தொலைக்கல்வி
(ஆ) ஆளுமை விருத்தியும மனிதவள அபிவிருத்தியும்
(இ) நேர முகாமைத்துவத்தில் “பார்க்கின்சன் விதி”
(ஈ) ஆசிய நாடுகளில் வளர்ந்தோர் கல்வி

(25 புள்ளிகள்)

05.(அ) “மனிதவள அபிவிருத்தியில் குழுவாகச் செயற்படல் ஒரு சிறந்த நுட்பமாகும்”. – உமது அனுபவங்களைக் கருத்தில் கொண்டு இக்கூற்றை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) சுகாதாரம், போசாக்கு, தொழில்நுட்பம் ஆகிய அம்சங்கள் மனிதவள அபிவிருத்தியில் எவ்வாறான செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்பதை நடைமுறை உலகுடன் தொடர்புபடுத்தி ஆராய்க?

(15 புள்ளிகள்)

06.(அ) பாடசாலைகளிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர்களது விருத்திக்கு அவர்களது ஒழுக்கக் குறைபாடுகள் எவ்வாறு தடையாக அமைகின்றன என்பதனைப் பற்றிக் கருத்துரைக்க.

(12 புள்ளிகள்)

(ஆ) கல்வி அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்பதை நீர் மேற்கொண்ட கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(13 புள்ளிகள்)

********